**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC.1052/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விஜயகுமார் | Prosecution | LW-4 as PW-3 |
| Father Name | முத்தையன் | Defence | |
| Village | திருநன்றியூர் | Taluk | Sirkali |
| Calling | | Age | 62/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 02.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் **அது அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. தேதி மாதம் நினைவில் இல்லை சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும் எங்கள் ஊரை சேர்ந்த கோபு என்பவரும் எங்கள் ஊரில் ஐயனார் கோயில் அருகில் உள்ள சின்ன மதில் அருகே நின்று கொண்டிருந்த போது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் எங்கள் முன்னிலையில் மேப் வரைந்து கொண்டிருந்தார்கள் அதற்கு சாட்சியாக நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட கோபு என்பவர் தற்போது வெளிநாட்டில் வசித்து வருகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து சம்பவம் எப்போது நடைபெற்றது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த விபத்தில் யார் யார் அடிபட்டார்கள் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை எங்கள் ஊரில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து ஐயப்பன் செய்து கொடுத்துவிட்டு நான் சம்பவ இடத்தில் வைத்து செய்து கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை இல்லை.